இணைப்பு I.

[1-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 302-க்கான விடையைக் காண்க.]

சட்டப் பேரவை முன் வைக்கப்பட்ட விவர அறிக்கை.

[Vide answer to L.A.Q. (Starred) No. 610 by Thiru N. Kittappa, M.L.A.]

பதில்.

தஞ்சை மாவட்டத்தில் கீழ்க்கண்ட சிறு பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. கூட்டுறவுத் துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து நாடுகள் வளர்ச்சி கழகத் திட்டங்கள்.

(அ) 7,000 வடிமுனைக் குழாய் கிணறுகள் நீரேற்று கருவியுடன்.

(ஆ) 1,000 ஆழமற்ற குழாய் கிணறுகள் நீரேற்று கருவியுடன்.

(இ) 4,000 நீரேற்று கருவிகள்.

(ஈ) 90 நடுத்தர ஆழக் குழாய்க் கிணறுகள், நீரேற்றுக் கருவியுடன்.

2. மின்சார வாரியத்தினால் மேற் கொள்ளப்பட்டுள்ள கிராம மின் வசதி கழகத் திட்டங்கள்.

(அ) மாயவரம் ஒன்றியம் 1,300 நீரேற்று கருவிகள்.

(ஆ) செம்பனார் கோவில் ஒன்றியம்—800 நீரேற்று கருவிகள்.

(இ) குத்தாலம் ஒன்றியம்—300 நீரேற்று கருவிகள்.

(ஈ) சீர்காழி ஒன்றியம்—1,000 நீரேற்று கருவிகள்.

(உ) ஆனைக்காரன் சத்திரம்—550 நீரேற்று கருவிகள்.

(ஊ) ஒரத்தநாடு ஒன்றியம்—200 நீரேற்று கருவிகள்.

(எ) பாபநாசம் ஒன்றியம்—300 நீரேற்று கருவிகள்.

மொத்தம்—4,450 நீரேற்று கருவிகள்.

1978 பிப்ரவரி 28]

3. கீழ்க்கண்ட கிராம மின் வசதிக் கழகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, கிராம மின் வசதிக் கழகம், புது டில்லிக்கு, அனுப்பப்பட்டுள்ளன.

		நீரேற்றுக் கருவிகள்.
(அ) வலங்கைமான் ஒன்றியம்	..	200
(ஆ) அம்மாப்பேட்டை ஒன்றியம்	..	175
(இ) குடவாசல் ஒன்றியம்	..	300
மொத்தம்	..	675

நிலநீர் அனுமதி, நிலத்தடி நீர்த் துறையினால் வழங்கப் பட்டதைத் தொடர்ந்து மேலே கண்ட திட்டங்கள் தயாரிக்கப் பட்டு, மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4. தஞ்சை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியங் களில் கடன்கள் சிறு விவசாயிகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழும் வழங்கப்படுகின்றது.

5. பாசனத்திற்கு நில நீரைப் பெறுவதற்காக, குழாய்க் கிணறுகள், துளைக் கிணறுகள், வடி குழாய் கிணறுகள் ஆகியவை தோண்டும் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு இயந்திரங்களை யும் மற்றக் கருவிகளையும், அரசு வாடகைக்கு அளித்து வருகிறது.

சட்டமன்றப் பேரவை தமிழ்நாடு LEGISLATIVE ASSEMBLY TAMILNADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS